Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 85 of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.6**
Defence
Court

| | |
|---|---|
| Name | **உக்கிரவேல்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.**

**முதல் விசாரணை**:

நான் கீழக்கொள்ளையில் வசிக்கிறேன். நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். கோவில் திருவிழாவிற்கு அனுமதி கோரி கடந்த 01.09.2022 அன்று முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்திற்கு நானும், ராமசந்திரன் என்பவரும் காலை 10.45 மணிக்கு சென்றோம். அப்போது 1வது எதிரி உக்கிரவேலை ஞானசெல்வம் தாக்கப்பட்ட வழக்கு சம்மந்தமாக போலிசார்விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது உக்கிரவேல் தாங்கள் தாக்க பயன்படுத்திய கழி, இரும்பு கடப்பாறை ஆகியவை அவரது வீட்டில் இருப்பதாகக் கூறினார். கீழக்கொள்ளையில் உள்ள 1வது எதிரி உக்கிரவேல் வீட்டிற்கு போலிசார் அழைத்து வந்தார்கள். அவரது வீட்டின் இடது பக்கமாக வேலி ஓரத்தில் இருந்த இரண்டு தைலங்கழி, ஒரு இரும்பு பாறை கைப்பற்றினார்கள். நானும் ராமச்சந்திரனும் கையொப்பம் செய்தோம். **அந்த கைப்பற்றுதல் மகசர். அ.த.சா.ஆ-2 ஆகும்.** அவை நீதிமன்றத்தில் உள்ள சா.பொ-1 வரிசையாகும். போலிசார் என்னை இதுகுறித்து விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை

மேற்படி சொத்துக்களை கைப்பற்றிய போது அதில் இரத்தக் கரை படிந்திருந்தது. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட சா.பொ-1 வரிசையிலுள்ள பொருட்களில் இரத்தக்கரை இல்லை என்றால் சரிதான். நான் ஞானசெல்வத்தின் உறவுக்காரர் கிடையாது. அதே ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் இறந்த ஞானசெல்வத்தின் சமூதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரிகள் வேறு வகுப்பை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். என் வீட்டிற்கும், ஞானசெல்வம் வீட்டிற்கும் 150 மீட்டர் தொலைவு இருக்கும். சம்பவம் குறித்து என்னை விசாரிக்கவில்லை. சாட்சி கையொப்பம் போட்ட அன்று மட்டும் என்னை விசாரித்தார்கள். நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்யவில்லை. கோவில் திருவிழா நிர்வாக பொறுப்பில் நான் இல்லை. அ.சா-4

கலையரசன் சம்பவ சமயத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினராக இருந்தார். சாட்சி ராமதாஸ் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார். ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர் இருக்கும்பட்சத்தில் நானும், ராமசந்திரனும் கோவில் திருவிழாவிற்காக அனுமதி கேட்க சென்றதற்கு, குறிப்பிட்டு காரணம் எதுவும் கிடையாது, ஊரிலிருந்து அனுமதி கேட்க எல்லோரும் போவார்கள் நாங்கள் இருவர் மட்டும் முன்னதாகவே சென்றுவிட்டோம். நான் அனுமதி கோரி மனு கொடுத்ததன் நகல் என்னிடம் இல்லை. சம்பவம் பற்றி எனக்கு அதற்கு முன்பாகவே தெரியும். ஞானசெல்வத்தின் வீடு என் வீட்டிற்கு பக்கத்தில் இருப்பதால் இந்த விவரம் எனக்கு தெரியும். அ.சா-4 கலையரசன் வழக்கு சொத்துக்கள் எதிரி வீட்டில் இருந்த விவரம் என்னிடம் சொல்லவில்லை. சம்பவம் நடந்து இரண்டு மாதத்திற்கு பிறகு ஞானசெல்வம் இறந்தார். ஞானசெல்வம் சிகிச்சைக்காக மருத்துவமனை சென்ற விவரம் நான் கேள்விப்பட்டுள்ளேன். ஞானசெல்வத்தின் பிரேதத்தை அவரது வீட்டில் பார்த்தேன், தேதி ஞாபகம் இல்லை. ஞானசெல்வத்தின் பிரேதத்தை எதிரிகள் வீட்டில் வைத்த விவரம் எனக்கு தெரியாது. நான் தாமதமாகத்தான் சென்றேன். எனக்கு எந்தவிரமும் தெரியாது என்றாலும், நான் போலிசாருக்கு கையிருப்பு சாட்சி என்றாலும், நான் சொன்னதுபோல் 1வது எதிரி எதுவும் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், எந்த பொருட்களும் என் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை- இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 85 of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.4**
Defence
Court

| | |
|---|---|
| Name | கலையரசன் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் கீழகொள்ளை கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சம்பவத்தில் இறந்த ஞானசெல்வத்தை தெரியும். நானும் ராமதாஸ் என்பவரும் மருங்கூர்

சென்றுவிட்டு 18.08.2022 அன்று இரவு 9 மணியளவில் ஞானசெல்வம் வீட்டு வழியாக வந்து கொண்டு இருந்தோம். அப்போது வேப்பமரத்தை எடுத்துவிட்டார்கள் என்று ஆஜர் எதிரிகள் உக்கிரவேல் அவரது அப்பா அவரது மனைவி ஆனந்தி அவரை அங்கிருந்த கட்டையால் ஞானசெல்வத்தை தாக்கினார்கள். எதிரி ஆனந்தி இரும்பு பாறையால் ஞானசெல்வத்தின் தலையில் அடித்தார். இதன் பிறகு என்னிடம் பிரச்சனை செய்தால் கொன்றுவிடுவேன் என்று எதிரி உக்கிரவேல் ஞானசெல்வத்தை மிரட்டினார். நானும் ராமதாஸ்ம் அவர்களை விலக்கி விட்டோம். ஞானசெல்வத்தை அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலமாக பண்ருட்டி அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து ஜீப்மர் மருத்துவமணைக்கு மேல் சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். மருத்துவமணையில் இருந்து விடுவிக்கப்பட்டு வீட்டிற்கு வந்து விட்டார்கள். தலை வலி அதிகமாக உள்ளது என்று மீண்டும் ஜீப்மர் மருத்துவமணைக்கு சென்று அங்கே அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பிறகு சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமணைக்கு ஞானசெல்வத்தை சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். 14.11.2022 அன்று ராஜீவ் காந்தி மருத்துவமணையில் சிகிச்சைக்கு சேர்ந்து 10 நாட்கள் ஞானசெல்வம் சிகிச்சை பெற்றார். 28.11.2022 அன்று ஞானசெல்வம் இறந்துவிட்டார். கீழகொள்ளைக்கு ஞானசெல்வத்தின் பிரேதத்தை எடுத்து வந்துவிட்டார்கள். வழக்கு போட சொல்லி முண்டியம்பாக்கம் மருத்துவமணைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்து சென்றதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

நான் ஞானசெல்வத்தின் உறவுக்காரர் கிடையாது. அசா 2 சிவா மற்றும் அசா 3 சூர்யா யார் என்று தெரியாது. நான் மருங்கூர் ஊராட்சி மன்ற உறுப்பினராக உள்ளேன். என் வீட்டிற்கும் ஞானசெல்வம் வீட்டிற்கும் 600 மீட்டர் தொலைவு இருக்கும். என் வீட்டிற்கு

செல்ல ஞானசெல்வத்தின் வீட்டை கடக்க வேண்டியதில்லை. நான் ஒரு வேலையாக அங்கே சென்றேன். எதிரிகளின் வீடு என் வீட்டில் இருந்து தோரயமாக 1 கிலோ மீட்டர் இருக்கும். எதிரிகளின் வீட்டிற்கும் ஞானசெல்வத்தின் வீட்டிற்கும் இடையே 100 லிருந்து 200 மீட்டர் தொலைவு இருக்கும். புறம்போக்கு இடத்தில் இருந்த வேப்பமரம் குறித்து இரு தரப்பினருக்கும் தகராறு ஏற்பட்டது. அது குறித்து வேறு ஏதேனும் வழக்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. வேப்பமரம் குறித்து பிரச்சனை இருப்பபதாக எனக்கு யாரும் தகவல் கொடுக்கவில்லை. சம்பவம் நடக்கும்போதே நான் வந்தேன். சம்பவத்தில் எதிரிகள் மூவரையும் நான் பார்த்தேன். சிவாவின் மனைவி சூர்யாவை பார்த்தேன். சம்பவ நேரத்தில் சிவாவும் அவரது மனைவி சூர்யாவும் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். எங்கிருந்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சிவா எங்கே குடியுள்ளார் என்று எனக்கு தெரியாது. யாரோ ஒரு உறவினரை வரவைத்து ஞானசெல்வத்தை அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். அவரை யார் வரவைத்தார்கள் என்று தெரியாது. அவர் எங்கள் ஊரை சேர்ந்த ராஜ்குமார். அரை மணி நேரத்தில் ராஜ்குமார் அங்கே வந்துவிட்டார். அதுவரையிலும் ஞானசெல்வம் கீழே மயங்கி கிடந்தார். நான் ஊராட்சி மன்ற உறுப்பினராக இருக்கும் நான் ஏன் உடனடியாக அவரை மருத்துவமணை அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனக்கு இரத்தத்தை பார்த்து பதட்டமாகிவிட்டது. நான் ஞானசெல்வத்தை ஏற்றிவிட்டதோடு சரி மருத்துவமணைக்கு செல்லவில்லை. இரும்பு பாறையால் ஞானசெல்வத்தை தாக்கியபோது நான் அங்கே வந்தேன். சம்பவத்தை நான் பார்த்தேன். அந்த ஆயுதத்தை நீதிமன்றத்தில் பார்த்தால் அடையாளம் காட்டமுடியும். காண்பிக்கப்பட்ட சான்று பொருள் 1 வரிசையில் உள்ள கடப்பாறையில் இரத்தக் கறை இல்லை என்றால் சரிதான். எதிரிகள் கடப்பாறையை அவர்கள் வீட்டு பக்கத்தில் போட்டு வைத்தார்கள். அதை நான் பார்த்தேன். போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக இரண்டு முறை

விசாரித்தார்கள். முண்டியம்பாக்கம் மருத்துவமனையிலும் மற்றும் ஊரிலும் என்னை விசாரித்தார்கள். போலிசாரிடம் ஆயுதங்களை எதிரிகள் மறைத்த விவரத்தை போலிசார் கேட்கவில்லை. நான் சொல்லவில்லை. நானாகவும் இந்த விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை. முதலில் மருங்கூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இருசக்கர வாகனத்தில் ஞானசெல்வத்தை ராஜ்குமாரும் சிவாவும் மத்தியில் உட்கார வைத்து அழைத்து சென்றார்கள். சம்பவயிடத்தில் இருந்து மருங்கூர் மருத்துவமனை 1 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். மயக்க நிலையில் ஞானசெல்வத்தை அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். மருங்கூர் மருத்துவமனையில் இருந்து பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அவரை அழைத்து சென்றதாக கேள்விபட்டேன். இந்த விவரத்தை அவர்கள் அழைத்து சென்ற உடனே கேள்விபட்டேன். பண்ருட்டி அரசு மருத்துவமனையில் ஞானசெல்வத்தை சென்று பார்த்தேன். எந்த தேதி எத்தனை மணிக்கு பார்த்தேன் என்று ஞாபகம் இல்லை. ஞானசெல்வத்தை கடலூர் அல்லது ஜீப்மர் மருத்துவமனையில் நான் பார்க்கவில்லை. பண்ருட்டி மருத்துவமனையில் இருந்து அன்று இரவே கடலூர் மருத்துவமனைக்கு ஞானசெல்வத்தை அழைத்து சென்றதால் நான் பண்ருட்டி மருத்துவமனையில் ஞானசெல்வத்தை பார்த்து இருக்க முடியாது என்றால் சரியல்ல. 10, 15 நாட்கள் கடலூர் மருத்துவமனையில் அவர் சிகிச்சையில் இருந்ததாக கேள்விபட்டேன். மருத்துவ ஆலோசனையை மீறி கடலூர் மருத்துவமனையில் இருந்து ஞானசெல்வம் வீட்டிற்கு வந்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜீப்மர் மருத்துவமனையில் செய்யப்பட்ட அறுவை சிகிச்சைப்பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் 18.11.2022 அன்று ஞானசெல்வம் அனுமதிக்கப்பட்டார். ஞானசெல்வம் இறந்த விவரத்தை

எனக்கு நெய்வேலி இந்திரா நகரில் இருந்து எனது நண்பர் தகவல் கொடுத்தார். அந்த சமயத்தில் நான் நெய்வேலி இந்திரா நகரில் தான் இருந்தேன். 29.11.2022 அன்று ஞானசெல்வத்தின் பிரேதத்தை ஊருக்கு கொண்டுவந்தாக கேள்விபட்டேன். பிரேதம் வந்த பிறகு நான் அங்கே வந்து காலை 10 மணிக்கு பார்த்தேன். பிரேதம் ஞானசெல்வம் வீட்டில் தான் இருந்தது. நான் பார்த்த சமயத்தில் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை. நான் பார்த்தபோது போலிசார் அங்கே இல்லை. ஞானசெல்வத்தின் வீட்டில் இருந்து பிரேதம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமணைக்கு கொண்டு செல்லப்பட்டது. ஞானசெல்வத்தின் மனைவி பிரேத்தை எதிரிகள் வீட்டில் வைத்ததாகவும் பிறகு பிரேத பரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் மருத்துவமணைக்கு கொண்டு செல்லப்பட்டதாக சொல்லிருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் ஊராட்சி மன்ற உறுப்பினராக உள்ள காரணத்தினாலும் ஞானசெல்வத்தின் உறவினர் என்ற காரணத்தினாலும் போலிசார் கேட்டுக்கொண்டது போல் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 85 of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.5**
Defence
Court

| | |
|---|---|
| Name | ராஜ்குமார் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் கீழகொள்ளையில் வசிக்கிறேன். ஞானசெல்வம் எனது ஊர்க்காரர். ஆஜர் எதிரிகளும் எனது ஊர்க்காரர்கள். கடந்த 18.08.2022 அன்று இரவு 9.30 மணிக்கு எதிரிகள் தாக்கியதில் இரத்த காயம் ஏற்பட்டது. ஞானசெல்வத்தின் மைத்துனர் சிவா போன் மூலமாக சண்டை நடந்த விவரத்தை என்னிடம் கூறி நான் 10 நிமிடத்தில் எனது இருசக்கர வாகனத்தில் வந்தேன். எனது இருசக்கர வாகனத்தில் ஞானசெல்வத்தை சிவா பிடித்துக்கொள்ள பின்னார் அமரச்செய்து மருங்கூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கே முதலுதவி செய்துவிட்டு பின்னர் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் அழைத்து சென்றேன். மறுநாள் காலை அங்கிருந்து கடலூர் அரசு மருத்துவமணைக்கு மேல் சிகிச்சைக்காக சேர்த்தேன். தொடர் சிகிக்சை அளித்தும் பலன் அளிக்காமல் ஞானசெல்வம் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

நான் ஞானசெல்வத்தின் உறவினர் கிடையாது. ஒரே வகுப்பை (சாதி) சேர்ந்தவர் ஆகும். அசா-2 சிவா ஞானசெல்வத்தின் மைத்துனர் ஆவார். அசா 1 ராஜலட்சுமி ஞானசெல்வத்தின் மனைவி. அசா-1 ராஜலட்சுமி என் அப்பா கலியமூர்த்தி ஞானசெல்வத்தின் மைத்துனர் என்று சொல்லியிருந்தால் அது தவறானது. என் வீடு ஞானசெல்வத்தின் வீட்டில் இருந்து அரை கிலோமீட்டர் இருக்கும். எனக்கு தகவல் வந்தபோது நான் என் வீட்டில் இருந்தேன். நான் சம்பவ இடத்திற்கு வந்தபோது நிறைய நபர்கள் இருந்தார்கள், எதிரிகள் அவர்கள் வீட்டருகே இருந்தார்கள். சம்பவம் முடிந்துதான் நான் வந்தேன் என்றால் சரிதான். நான் வாகனத்தை ஓட்ட ஞானசெல்வம் என் பின்னால் அமர்ந்ததாகவும், அதற்கு பின்னால் சிவா அமர்ந்து வந்ததாகவும் நான் போலிசார்

விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சிவா இருசக்கர வாகனத்தை ஓட்ட ஞானசெல்வம் அதற்கு பின்னால் அமர்ந்து தான் அவருக்கு பின்னால் உட்கார்ந்து கொண்டதாகவும் சொல்லியிருந்தால் அது தவறானது. ஞானசெல்வத்தை அதன் பிறகு நான் எந்த மருத்துவமனைக்கும் சென்று பார்க்கவில்லை. 28.11.2022 அன்று ராஜீவ் காந்தி மருத்துவமனையில் ஞானசெல்வம் இறந்துவிட்டதாக ஊரில் இருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். அன்றையதினம் மாலை எனக்கு தகவல் வந்தது. ஞானசெல்வத்தின் பிரேதம் 29.11.2022 அன்று மதியம் ஊருக்கு கொண்டுவரப்பட்டது. அது ஞானசெல்வம் வீட்டில் வைக்கப்பட்டது. ஞானசெல்வத்தின் பிரேதத்தை எதிரிகள் வீட்டில் வைத்தது எனக்கு தெரியாது. ஞானசெல்வத்தின் பிரேதம் பிரேத பரிசோதனைக்கு எடுத்து சென்ற விவரம் எனக்கு தெரியும். நான் ஞானசெல்வத்தின் உறவினர் என்றாலும், அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*